MC. No.15/2025

நாள் :-17.04.2026

ம.சா. 1:- துர்காதேவி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–

28.03.2022 அன்று எனக்கும் எதிர்மனுதாரருக்கும் மயிலாடுதுறை நாராயண மஹாலில் திருமணம் நடந்தது. பெற்றோர்களால் நிச்சயித்து முடிவு செய்யப்பட்டு நடந்த திருமணம். நான் M.Sc. B.Ed படித்துள்ளேன். எதிர்மனுதாரர் B.com படித்துள்ளார் என்று சொன்னால் திருமணத்தின்போது MBA படித்துள்ளார் என்று சொன்னார். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றும், எதிர்மனுதாரரின் கல்வி தகுதி எனது கல்வி தகுதியைவிட குறைவு தான் என்று சொன்னால் கல்வி தகுதி குறைவு தான். இந்த விவரம் தெரிந்து தான் திருமணம் செய்துகொண்டேன் என்று சொன்னால் திருமணத்தின்போது MBA படித்துள்ளார் என்று சொன்னார். திருமணத்திற்கு பிறகு அவருடைய கல்வி தகுதி குறித்து எந்தவித சான்றிதழை நான் பார்த்ததில்லை. நான் ஏதேனும் வேலைக்கு செல்கிறேனா என்றால் 2026 வருடம் மார்ச் மாதம் வரை தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தேன். தற்போது வேலையை இராஜினாமா செய்துவிட்டேன். இந்த மனுதாக்கல் செய்யும்போது நான் பணியில் இருந்தேனா என்று சொன்னால் இல்லை. நான் இந்த மனுதாக்கல் செய்யும்போது பணிபுரிந்தேன் என்றும், மாதம் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தேன் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் ராஜ்குமார் விவசாய குடும்பத்தை சேர்ந்தவர் என்று சொன்னால் சரிதான். இந்த எதிர்மனுதாரர் அவர் தகப்பனாருடன் சேர்ந்து அவருக்கு உதவியாக இருந்துவந்து விவசாயம் தான் செய்து வருகிறார் என்று சொன்னால் அவர் தற்போது என்ன செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. திருமணத்திற்கு பிறகு புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் நாயக்கர்பட்டி கிராமத்தில்

17/4/26

CJM, MAYILADUTHURAI.

எதிர்மனுதாரர் குடும்பத்தில் வசித்து வந்தோம். எங்களுடன் எனது மாமியார், மாமனார் வசித்து வந்தனர். நாங்கள் இருவரும் ஒன்றாக வாழ்ந்த காலத்தில் எங்களுக்குள் எவ்வித பிரச்சனையும் இல்லை என்று சொன்னால் எங்களுக்குள் சிறுசிறு பிரச்சனை இருந்து வந்தது. திருமணத்திற்கு பிறகு அடிக்கடி எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று வருவேன் என்று சொன்னால் எனது கணவருடன் சென்று வருவேன். ஜனவரி 2023 –ல் எனக்கு வளைகாப்பு நடந்தது. அந்த வளைகாப்பு குளத்தூர் நாயக்கர்பட்டி பி.ஜி மஹாலில் நடைபெற்றது. அந்த செலவுகளை எதிர்மனுதாரர் தான் செய்தார் என்று சொன்னால் மண்டபத்திற்கு மட்டும்தான் செலவு செய்தார்கள், சாப்பாடு, பலகாரம், விருந்தாளிகளுக்கான பரிசுகள் எனது பெற்றோர் வீட்டில்தான் செய்தார்கள். எனது அப்பா வளைகாப்பிற்காக ரூ.1,00,000/– செலவு செய்ததாக மனுவில் சொல்லியுள்ளதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 9 மாதம் தான் வளைகாப்பு நடந்தது. அதுவரை எனது கணவர் வீட்டில் இருந்தேனா என்றால் நடுவில் பிரச்சனை வந்ததால் சுமார் இரண்டு மாதத்திற்கு இடைவெளி விட்டு எனது அம்மா வீட்டில் இருந்தேன். தஞ்சாவூர் வினோதன் மருத்துவமனையில் நான் கர்ப்பமாக இருந்த காலத்தில் பார்த்தேன். ஸ்கேன் எடுப்பதற்கு எனது அம்மா வீட்டில் தான் செலவு செய்து பார்த்தார்கள். நான் கர்ப்பமாக இருந்த காலக்கட்டத்தில் எதிர்மனுதாரர்தான் மருத்துவ செலவு அனைத்தும் பார்த்தார் என்றால் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பத்தி 9–ல் மனுவில் எதிர்மனுதாரர் குழந்தை இடையூறு இருப்பதாக அதை கலைக்க சொன்னாதால் அதனால் நான் மனவேதனை பட்டதாக இந்த வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மனுவில் பத்தி 4–ல் திருமணத்தின்போது 30 பவுன் நகையும், ரூ.2,00,000/– சீர்வரிசை பொருட்கள் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாலி சரடு, மற்றும் ஒரு செயின், மோதிரம், இரண்டு குண்டுமணி ஆக மொத்தம் சுமார் 8 பவுன் மட்டும் எதிர்மனுதாரர் தரப்பில் போட்டார்கள். எனக்கு சீர்வரிசையாக பொருட்கள் மற்றும் நகைகள் என்னிடம் உள்ளது என்று சொன்னால் 20 பவுன்

CJM, MAYILADUTHURAI.

நகையும், சீர்வரிசை பொருட்களும் என் வசம் உள்ளது, மீதமுள்ள 10 பவுன் நகை பேங்க் லாக்கரில் இருப்பதாகவும், திரும்பி தருவதாகவும் என்னிடம் சொன்னார். பேங்க் லாக்கரில் இருப்பதாக சொல்வது முற்றிலும் தவறு என்றும், நான் பெற்றோர் வீட்டிற்கு செல்லும்போது அனைத்து நகைகளும் எடுத்து சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 17.02.2023 அன்று எங்களுக்குள் பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையின் பெயர் இன்பா. மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து குழந்தை பிறந்தது. மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது எதிர்மனுதாரர்கள் குடும்பத்தினர் உடனிருந்தார் என்று சொன்னால் சரிதான். குழந்தை பிறந்த பிறகு முதலில் எதிர்மனுதாரரிடம் காண்பிக்காமல் எனது தகப்பனார் அதை தவிர்த்ததால் தான் இரு வீட்டாருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது மாமியார் தான் குழந்தையை வாங்கினார். குழந்தையின் பெயர் சூட்டும் விழாவிற்கு எதிர்மனுதாரர் குடும்பத்திற்கு முறைப்படி தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது பெற்றோர் தெரிவிக்காத காரணத்தினால் தான் எதிர்மனுதாரர் குடும்பத்தில் யாரும் கலந்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது உண்மையை பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. குழந்தை பிறந்து 5 மாதம் எனது பெற்றோர் வீட்டில் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு எனது கணவர் வீட்டிற்கு சென்று சுமார் 2 மாதம் இருந்திருப்பேன், சரியாக ஞாபகம் இல்லை. 2024 மாதம் ஜுன் மாதம் எனது அண்ணனுக்கு திருமணம் முடிவு செய்யப்பட்டு நிச்சயதார்த்தம் நடந்ததற்கு நான் எனது கணவர் வீட்டில் இருந்துதான் வந்தேன். அதன் பிறகு எனது கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். எனது அண்ணாவின் திருமணத்திற்கு எதிர்மனுதாரர் வீட்டில் பணம் உதவி கேட்டார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. நிச்சயதார்த்திற்கு பிறகு ரூ.2,00,000/- பணம் உதவியாக எதிர்மனுதாரர் குடும்பத்தில் கேட்டார்கள் என்றும், அவர்கள் கொடுக்க மறுத்திவிட்டதால் தான் நான் எனது பெற்றோர் வீட்டிலேயே இருந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 21.06.2024 அன்று அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர்

CJM, MAYILADUTHURAI.

17/4/26

மீது அடிப்பதாகவும், என்னுடன் வாழ மறுப்பதாகவும் புகார் கொடுத்தேன். அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இரண்டு, மூன்று விசாரணை செய்தார்கள். எங்கள் இருவருக்கும் அங்கு கவுன்சிலிங் கொடுத்தார்கள். விசாரணையின் போது எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்வதாக கூறினார் என்றால் கூறவில்லை. விசாரணையின்போதே குளத்தூர் நாயக்கர்பட்டியில் வாழ எதிர்மனுதாரர் அழைத்தார் என்றும் நான் தான் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. பலமுறை எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு பல முயற்சிகள் செய்தும் நான் ஒத்துழைக்காமல் பிடிவாதமாக இருந்து வருவதுதான் பிரிந்து இருப்பதற்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் கூறியது போல் சேர்ந்து வாழ்வதற்கு எதிர்மனுதாரர் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்று சொல்வது முற்றிலும் பொய் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மனுவில் பத்தி 16–ல் எதிர்மனுதாரர் பெற்றோர் என்னை எனது வீட்டிற்கு சென்று வரலாம் என்று கூறி அழைத்து வந்து ஒன்று தெரியாதது போல் எனது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டுதாக சொல்லியுள்ள பட்சத்தில் எந்த தேதி எப்போது என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் அது சரிதான். எனது மாமியார் , மாமனார் சமரசம் பேசுவதற்கு எங்கள் வீட்டிற்கு வந்து, எதிர்மனுதாரர் அப்போது போனில் எனது அப்பாவையும், அம்மாவையும் கொச்சை வார்த்தையில் திட்டியதற்கு, எனது மாமியார், மாமனார் அவன் அப்படிதான் பன்னுவான் அட்ஜஸ் செய்து இருக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னதால் நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். அப்போது மாமியார், மாமனார் மற்றும் கணவர் விசாரணைக்கு வந்து விசாரணை செய்தார்கள். அன்றைய தினம் பத்தி–16 சொல்வது போல் எனது மாமியார், மாமனார் என்னை விட்டுவிட்டு சென்றுவிட்டனர். புகார் ஏன் கொடுத்தேன் என்று தற்போது சொல்வது போல் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் மேற்சொன்ன சங்கதிகளை நான் சொல்லியுள்ளேன். புகாரை தற்போது தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்தில் விசாரணையின் போது இரண்டு கவுன்சிலிங் பிறகு

CJM, MAYILADUTHURAI.

குளத்தூர் நாயக்கர்பட்டியில் வாழமாட்டேன் என்றும், மயிலாடுதுறையில் தனி வீடு எடுத்து இருந்தால் வாழ்வேன் என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு எடுக்க நான் ஏதாவது முயற்சி செய்தேனா என்றால் முயற்சி செய்தேன், ஆனால் எதிர்மனுதாரரால் அட்வான்ஸ் எதுவும் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார். சுமார் 2 வருடமாக எதிர்மனுதாரரும் நானும் பிரிந்திருக்கிறோம். நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் முதல் இரண்டு மாதம் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். ஆனால் அவர் எடுக்கவில்லை. காவல் நிலையத்தில் சொன்னவாறு நான் வேலைத்தேடி விட்டு அழைத்து செல்வதாக சொன்னதால்தான் போனை எடுக்கவில்லை என்று பின்பு நான் போன் செய்யவில்லை. நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து தயராக இருக்கிறேனா என்றால் மயிலாடுதுறையில் தனி வீடு பார்த்து இருந்தால் நான் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன். என்னுடைய மனுவில் பத்தி 17 எதிர்மனுதாரர் 10 ஏக்கர் வைத்து விவசாயம் செய்து, MBA வரை படித்து தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து ரூ.1,00,000/- வரை வருமானம் ஈட்டி வருகிறார் என்று சொல்லியுள்ள பட்சத்தில் அதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 10 ஏக்கர் நிலம் இருப்பதாக சொல்லும் பட்சத்தில் அதற்கான ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் மனுவில் கூறியது போல் எதிர்மனுதாரர் ரூ.1,00,000/- சம்பாதிக்கவில்லை என்றும், அவர் விவசாயம் செய்துதான் தனது வயதான பெற்றோரை பராமரித்து வருகிறார் என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்மனுதாரர் என்னையும், குழந்தையும் நல்ல முறையில் பராமரிக்க தயாராக உள்ளார் என்றும், நான் தான் அப்பாவின் பேச்சை கேட்டு அவருடன் வாழ மறுத்து அவர் ஊரை விட்டு வரச்சொல்லி தனிக்குடித்தனம் வரச்சொல்லி வற்புறுத்துகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுவில் எதிர்மனுதாரர் மற்றும் பெற்றோர் பற்றி கூறியுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளும் இந்த வழக்கிற்காக பொய்யாக கூறப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு போதுமான வருமானம் உள்ள நிலையில் மற்றும் வேலைக்கு சென்று சம்பாதிக்கும்

CJM, MAYILADUTHURAI.

17/4/26

பட்சத்தில் என்னுடைய சுய விருப்பத்திற்காக எதிர்மனுதாரரிடமிருந்து பிரிந்து வாழும் நிலையில் இந்த மனுவை நிலைக்கதக்கதல்ல என்பதால் இந்த மனுவை தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

17/4/20

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.